சார்பு நீதிமன்றம், சங்ககரி

MCOP.No.139/2016

எ.ம.சா.2

நாள். 22.06.2023.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செங்கோட்டுவேல் | மதம்: | இந்து |
| தகப்பனார்/கணவர் பெயர்: | -- | ஜாதி: | -- |
| கிராமம்: | -- | வேலை: | -- |
| வட்டம்: | -- | வயது: | -- |

2023 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 22 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய எ.ம.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் ரெட்டிப்பட்டியில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். நான் 01.03.2016 அன்று மதியம் நான் ரெட்டிப்பட்டியில் இருந்து தேவூருக்கு மாருதி ஆம்னி காரில் சென்றேன். குள்ளம்பட்டி மற்றும் வெள்ளூத்துபெருமாள் கோவில் செல்லும் வழியில் போய் விட்டு மீண்டும் அதே வழியில் தேவூர் செல்வதற்காக வந்தேன். அப்போது மெயில் ரோட்டிற்கு சுமார் 10.மீ முன்பாக ஒரு கணவன் மனைவி இருசக்கர வாகனத்தில் தேவூரை நோக்கி சென்று கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென்று இரு சக்கர வாகனத்தை ஓட்டியவர் பிரேக் பிடித்ததில் இருவரும் கீழே விழுந்து விட்டார்கள். அவர் எதற்காக பிரேக் பிடித்தார் என்று தெரியவில்லை. அப்போது அங்கு இருந்தவர்களும் நானும் உடனடியாக ஓடி சென்று பார்த்தோம். பின்பு அவர்களை அருகில் இருந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். இரு சக்கர வாகனத்தை ஓட்டி கொண்டு வந்தவரின் அஜாக்கிரதையால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது. இது சம்பந்தமாக போலீசாரும் என்னை விசாரித்தார்கள். குற்ற வழக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து நடைபெற்றது உண்மை தான். இந்த விபத்து தொடர்பாக தேவூர் காவல் நிலையத்தில் என் மீது குற்ற எண்.40/2016 என்ற எண்ணில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்று விபத்து ஏற்படுத்தியதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது

என்றால் சரிதான். இந்த விபத்து சம்பந்தமாக நான் தனியாக போலீஸ் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய கவன குறைவால் விபத்து ஏற்பட்டதால் தான் நான் போலீஸ் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர்கள் சாலை விதியை கடைபிடித்து சாலையின் ஓரமாக வந்து கொண்டிருந்தார்கள் என்றும், நான் தான் அதிவேகமாக சென்று அவர்கள் மீது மோதினேன் என்றால் சரியல்ல. விபத்திற்க்கு என்னுடைய கவன குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு அமலில் இருந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது.

<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரின் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-செங்கோட்டுவேல்

ஒம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி